NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 15 July 2022

# ஐபிஎஸ் ஆய்வில் வெளிப்பட்ட பல்வேறு முக்கிய அம்சங்கள்

கொள்கை ஆய்வுக் கழகம் மேற்கொண்ட ஆய்வின்படி பத்து முக்கிய அம்சங்கள் குறித்து சிங்கப்பூரர்களிடையே கவலையும் அக்கறையும் நிலவிவருகின்றன.

சுகாதாரப் பராமரிப்புக்கான கட்டணம், பயனீட்டுக் கட்டணம், உணவுக் கட்டணம் ஆகியவை இவ்வாண்டு அதிகரிக்கவிருப்பது குறித்து பத்தில் நால்வர் கவலை தெரிவித்துள்ளனர்.

கொள்ளைநோய்க்குப் பிந்திய நிலையில் சிங்கப்பூரர்களுக்கு உயரும் ஜிஎஸ்டி தொடர்பில் ஆதரவு அளிப்பதிலும் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்குவதிலும் நாடு கவனம் செலுத்த வேண்டும் என்றும் ஆய்வில் கூறப்பட்டது. 4ஜி தலைவராக லாரன்ஸ் வோங் சிறந்த தேர்வு என்று பத்தில் அறுவர் நம்பிக்கை தெரிவித்தனர்.

அடுத்த கொள்ளைநோயை சந்திக்க சிங்கப்பூர் தயாராக உள்ளதென சுமார் 64 விழுக்காட்டினர் ஆய்வில் கூறினர். வீட்டில் அதிகம் சமைப்பது, உடற்பயிற்சி செய்வது போன்ற கொள்ளைநோயின்போது மக்கள் தொடங்கிய புதிய பழக்கங்களைத் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும் என்று 90 விழுக்காட்டினர் கூறினர்.

முகக்கவசம் அணிவதைப் புதிய இயல்புநிலையாக ஏற்றுக்கொள்வதாக நான்கில் ஒருவர் குறிப்பிட்டிருந்தனர். தொடர்புகளின் தடம் அறிவதற்கான செயலியை வைத்திருப்பது அசௌகரியமாக உள்ளதென 55 விழுக்காட்டினர் கூறினர்.

அத்தியாவசியப் பொருள்கள், சுகாதாரப் பராமரிப்பு, தயார்நிலை ஆகிய மூன்று பாடங்களைத் தாங்கள் கற்றுக்கொண்டதாகவும் சிங்கப்பூரர்கள் கூறினர்.

மனநலன் மற்றும் உணர்ச்சிகள் தொடர்பில் மற்ற வயதுடையோரை விட 21-29 வயதுப் பிரிவினரும் 40-49 வயதுப் பிரிவினரும் அதிகமாகப் பாதிக்கப்பட்டனர்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.